[1984 மார்ச் 7

சேத்தியாத் தோப்பிலிருந்து வனகிரி வரை வெள்ளாற்றுக்கரைக்கும் தடுப்புச்சுவர் அமைக்கும் திட்டம்.

206—(*வினா எண் 19681)—திரு. ஏ. இராமலிங்கம் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம் சேத்தியாத் தோப்பிலிருந்து புவனகிரி வரை வெள்ளாற்றுக் கரைக்குத் தடுப்புச் சுவர் அமைக்கும் திட்டம் எப்போது துவங்கி முடிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. திட்டம் சம்பந்தமாக கேட்கப்பட்டுள்ள சில கூடுதல் விபரங்கள் தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.

பிளவக்கல் நீர்த்தேக்கத்திலிருந்து விழுப்பலூர் கிராமத்திற்குத் தண்ணீர் வழங்கும் திட்டம்

207—(*வினா எண் 19750)—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவில்லிபுத்தூர் வட்டம் வத்திராயிருப்புக் கிராமம் பிளவக்கல் நீர்த் தேக்கத்திலிருந்து விழுப்பலூர் கிராமத்திற்குத் தண்ணீர் கொடுக்கும் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு யா. சை. மு. யூசுப் : ஆம்.

மோர்தானா அணை கட்டும் திட்டம்

208—(*வினா எண் 19975)—திரு. கே. ஆர். சுந்தரம் : மற்றும் திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் அருகில் மோர்தானா அணை கட்டும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அந்த வேலை எப்பொழுது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) மற்றும் (ஆ) திட்டம் தலைமைப் பொறியாளரின் ஆய்வில் உள்ளது.

1984 மார்ச் 7]

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் அருகில் உள்ள இந்த மோர்தானா அணைத் திட்டம் ஆய்வில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தத் திட்டம் 1967ஆம் ஆண்டு முதற் கொண்டே கேட்கப்படும்போது எல்லாம் ஆய்வில் இருப்பதாகச் சொல்லப்படுகிறதே, இந்த ஆய்வு எப்போது முடிந்து, அந்த வேலைகள் எப்போது துவங்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் பாலாறு ஆற்றுப்படுகையில் கிடைக்கும் உபரி நீரைக் கொண்டு அமைப்பதாகும். பாலாறு படுகை நீரைப் பயன்படுத்துவதற்கு ஒரு சில விதிமுறைகள் சட்ட திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பாலாறு படுகையில் உபரி நீர் வரத்துக் குறைவாக இருப்பதாலும், அங்கே நீர்ப் பற்றாக் குறை இருப்பதாலும் அந்தத் திட்டத்திற்கு முன்னாள் வருவாய் வாரியம் ஒப்புதல் வழங்கவில்லை. என்றாலும் இந்தத் திட்டத்தை வேறு வகையில் கொண்டு வர முடியுமா என்பதை ஆய்வு செய்வதற்காக 5 ஆண்டுக்காலம் அந்தப் பகுதியில் கிடைக் கும் நீரின் அளவை ஆய்வு செய்யக் கோரப்பட்டுள்ளது. ஏற் கெனவே அந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டபோது இத்தகைய உரிய விவரங்களைத் தராத காரணத்தால்தான், இந்தத் திட்டத் திற்குத் தேவையான புள்ளி விவரங்களைத் தராத காரணத்தால் தான், தற்போது 5 ஆண்டுக்கால நீர் அளவை எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். அந்த நீர் அளவு எடுத்த பிறகு அங்கே உபரி நீர் இருப்பதாகத் தெரிந்தால் அந்தத் திட்டத்தை விரைவாக நிறைவேற்றுவது பற்றி தகுந்த பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் படும். ஆகவேதான் இப்படிப்பட்ட பதில் அடிக்கடி வந்து கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ஆர். சுந்தரம் : தலைவர் அவர்களே, 5 ஆண்டுக் கால நீர் அளவு பாலாறு படுகையில் எடுக்கப்பட்டு வருவதாகச் சொன்னார்கள். அந்த 5 ஆண்டுக்காலம் என்பது எந்த வருஷத் தில் இருந்து கணக்கிடப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவிக்க இயலுமா ? அதனுடைய இறுதி மதிப்பு எப்போது தயாரிக்கப் படும் என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, 1977-78ஆம் ஆண்டு நிலவரப்படி ரூ. 332 இலட்சம் மதிப்பீட்டில் அத்திட்டம் தயாரிக்கப்பட்டு இருக்கிறது. அதற்குப் பிறகு கூடுதலாகத் தேவைப்படுகின்ற புள்ளிவிவரங்கள் சேகரிக்க வேண்டியிருந்ததால், 5 ஆண்டுக்கால ஆய்வு நடந்து கொண்டு இருக்கிறது. ஆகவே அதை வைத்து மாண்புமிகு உறுப்பினர் கணக்குப் போட்டுக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS